**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**CC.No.48/2024**

**Deposition of LW-5/PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ஜெகதீஸ்வரன் | **Age** | : | 44/2026 |
| **Father Name** | : | இருளப்பன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | தம்மிநாயக்கன்பட்டி | **Calling** | : | கூலிவேலை |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18/03/2026.**
1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் தம்மிநாயக்கன்பட்டியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது. அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது. அதனை தம்மிநாயக்கன்பட்டியில் வைத்து கையொப்பம் செய்தேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் கையொப்பம் கேட்டார்கள். போட்டு கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2) கடந்த 01/02/2024 ஆம் தேதி நானும் வீரப்பராஜா என்பவரும் தேவாரம் ரங்கநாதபுரம் டாஸ்மாக் அருகே இருந்தபோது அங்கு TN 60 BZ 8169 என்ற பதிவு எண் கொண்ட பல்சர் வாகனத்தில் வந்த ஹரிஹரன் என்ற நபரையும் அவருக்கு

பின்னால் உட்கார்ந்து வந்த ஜெகதீஷ்குமார் என்பவரையும் அங்கு நின்று கொண்டு இருந்த தேவாரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரித்தார் என்றும், அவர்கள் இருவரும் முன்னுக்குப் பின் முரணாக பேசினார்கள் என்றும், அதன் பின்பு எங்களது முன்னிலையில் அவர்கள் இருவரையும் போலீசார் கைது செய்தனர் என்றும், அதன் பின்பு ஹரிஹரன் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும்,

3) அதில் 27/7/2023 ஆம் தேதி காலை 7 மணிக்கு தம்பிநாயக்கன்பட்டியில் உள்ள பொன்னையா என்பவரது வீட்டின் கதவு திறந்து இருந்ததாகவும், ஜெகதீஷ்குமார் வெளியில் நின்று கொண்டு யாரும் வருகிறார்களா என்று நோட்டம் பார்த்தார் என்றும், ஹரிஹரன் தான் உள்ளே சென்று டேபிளின் மேல் இருந்த தங்க மோதிரத்தை திருடி வந்ததாகவும், அதை தனது கையில் அணிந்து இருந்தார் என்றும், அதை போலீசாரிடம் ஹரிஹரன் எடுத்துக் கொடுத்தார் என்றும், போலீசார் 4.3 கிராம் எடையுள்ள மயில் படம் போட்ட தங்க மோதிரத்தையும் எதிரிகள் வந்த இருசக்கர வாகனத்தையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளை தெரியாது என்றும், காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ததாகவும், உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.18 18:18:39 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**